விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டம், செஞ்சி ஊராட்சி ஒன்றியம், சோ.குப்பம் கிராமம் மற்றும் சோ.குப்பம் ஊராட்சி மன்றத் தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை : திரு. க.சு.இராஜேந்திரன் ஊராட்சி மன்றத் தலைவர்.

ந.க.எண். 69/2023-24

நாள் : 25-03-2024

பொருள் : உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு - விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டம், செஞ்சி ஊராட்சி ஒன்றியம், சோ.குப்பம் ஊராட்சி சோ.குப்பம் கிராமம், புன்செய் சர்வே எண். 175/1A பூரா ஏக்கர் 0.73 செண்ட் (அல்லது) 2950 சதுர மீட்டர் பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள ஸ்ரீ பச்சையம்மாள் நகர் குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில்நுட்ப இறுதி ஒப்புதல் வழங்குதல் குறித்து.

பார்வை : 1. மனுதாரர் திரு. P.ரமேஷ், திருவண்ணாமலை அவர்களின் விண்ணப்ப நாள் : 22-03-2024.

2. அரசாணை எண். 79, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள் : 04-05-2017

3. மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், விழுப்புரம் மாவட்டம் அவர்களின் கடிதம் இணையதள வாயிலாக இணையதள விண்ணப்பம் ROC No. 024394IU/2024/TCP நாள்:13-3-2024

4. சார்பதிவாளர் பதிவுத்துறை, சார்பதிவாளர் அலுவலகம், சத்தியமங்கலம் தான ஆவண எண். 405/2024 நாள் : 06-03-2024

5. கூராய்வு கட்டணம் செலுத்திய ரசீது எண். 2023-2024/4/14/52/7/1-இல் ரூ.19,000/- நாள் : 22-03-2024, நிலப்பயன் மாற்றுக் கட்டணம் செலுத்தி ரசீது எண். 20240322004559 ரூ.4370 நாள் : 22-03-2024

****

உத்தரவு :

உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டம், செஞ்சி ஊராட்சி ஒன்றியம், சோ.குப்பம் ஊராட்சி சோ.குப்பம் கிராமம், புன்செய் சர்வே எண். 175/1A பூரா 0.73 செண்ட் (அல்லது) 2950 சதுர மீட்டர் பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள ஸ்ரீ பச்சையம்மாள் நகர் குடியிருப்பு மனைப்பதிவு பார்வை 1 மற்றும் 3-ல் சுட்டிய கடிதங்களுடன் பெறப்பெற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதலுக்கான கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு பார்வை 2 மற்றும் 3-ல் சுட்டியபடி மனைப்பிரிவு சாலை அமைப்பு வரைபடம் இசைவு வழங்கப்பட்டது.

பார்வை 4-ல் சுட்டியபடி சாலை, மூளை முடுக்கு மற்றும் பொது ஒதுக்கீடுகளை தான பத்திர ஆவண எண். 405/2024 நாள் : 06-03-2024 உள்ளாட்சியிடம் தானமாக ஒப்படைக்கப்பட்டு தான பத்திரம் அசல் பெறப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து பார்வை 3-ல் சுட்டியபடி பார்வை 5-ல் சுட்டியபடி கூராய்வுக்கட்டணம் மனைக்கு ரூபாய் 1000/- வீதம் 19 மனைகளுக்கு ரூ.19,000/- மற்றும் நிலப்பயன் மாற்று கட்டணமாக நிலத்தின் தற்போதைய சந்தை மதிப்பில் 3% க்கு ரூ.4,370/- உத்தேச மனைப்பிரிவிற்குண்டான கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது.

மனைப்பிரிவிற்கு இணைப்பில் உள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளின் படி ஒப்புதல் வழங்கப்படுகிறது. இணையதளம் வாயிலாக ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்திற்கு மேற்படி சோ.குப்பம் ஊராட்சி மன்ற தீர்மான எண்.69/2023-24 என எண்ணிடப்பட்டு அசல் வரைபடங்கள் மற்றும் ஒப்புதல் ஆணை இத்துடன் அனுப்பி வைக்கப்படுகிறது.

உள்ளாட்சியின் இறுதி ஒப்புதலுடன் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தினை சம்மந்தப்பட்ட நகர் ஊரமைப்பு மற்றும் பத்திரப்பதிவு அலுவலகத்திற்கும் நில அளவைத்துறைக்கும் தகவலுக்கும் உரிய நடவடிக்கைக்கும் அனுப்பி வைக்கப்படுகிறது.

இணைப்பு :

வரைபடம் மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகள்

K.S. Rajendiran
23/3/2024

ஊராட்சி மன்ற தலைவர்,
சோ.குப்பம் ஊராட்சி.

President,
So. Kuppam Panchayat
Gingee Block

பெறுதல் :

திரு. P.ரமேஷ்,
த/பெ. பச்சையப்பன்
ஊத்தாங்கல், நூக்காம்பாடி அஞ்சல்,
திருவண்ணாமலை,
திருவண்ணாமலை மாவட்டம்.